உ

சிவமயம்.

# திருவொற்றியூர்
# வடிவுடையம்மன்
## ஆசிரியவிருத்தம்.

இஃது.

தாயுமானசுவாமிகளாதீனபரம்பரை
எடுத்துக்கூட்டி
அருணாசலநாயனாரவர்களினது
மாணாக்கரிலொருவராகிய
ம-ா-ா-ஸ்ரீ.
திருத்தொட்டிக்கலை
வையாபுரிமுதலியாரவர்களால்
பார்வையிடப்பட்டு.

ஆ - அண்ணாமலைமுதலியா
ரவர்களின் - தமது
அருட்பிரகாசஅச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.
1880.

உ

கடவுள்துணை.

# திருவொற்றியூர்.

# வடிவுடையம்மன்

## ஆசிரியவிருத்தம்

சுந்தரிசவுந்தரி நிரந்தரிதுரந்தரி சோதியாய்நின்றவு
மையே, சுக்கிரவாரப்பெருமைகண்டுனது சேவையுஞ்
சொல்லவுமெளிதாகுமோ,சந்ததியாகியேசெந்தமிழ்ப்
புராணியென் சலிப்பெலாமாற்றியருள்வாய், சற்குணி
நற்குணிநிற்குணிசதுர்வேதசமயமுமாரிநீயே, சிந்தை
மிக நொந்துயான் வந்தகுறையுந்தன்முன் செப்பவுங்
கேட்கவில்லையோ, சேய்பெற்றதில்லையோ, நீதியுனக்கில்
லையோசெகமெலாம்பெற்றதாயே, தந்திரமுகுந்தனிட
தங்கைசிவகங்கையே தாரணிபுகழொற்றியூர்வாழ், தங்க
மலர்நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளி
வானவடிவே. (க)

மண்டலந்தன்னிலே கண்கொண்டதெய்வ நீமற்று
மொருதெய்வமுண்டோ, மந்திரப்பேய்களுந் தந்திரச்
சூனியமுமற்றசத்திராதிபகையும், கண்டுனதுபாதமலர்
நின்றுதுதிசெய்திடக்கலங்கிப்பரந்தோடுமே-கன்மமும்
பிணிகளும்வன்மமில்லாமலே கண்டவுடன்தெண்டனி

டுமே, இன்றுமுதலாய்வந்த பண்டுபழிபாவமு மினிமே ல்வரும்வினைகளும், எந்தன்மேல்கணக்காக சிந்தையினி னைக்காம லியமனணுகாமலருள்வாய். தண்டுளபமாலை யணி மார்பனிட தங்கையே தரணிபுகழொற்றியூர்வாழ் தங்கமலர்நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொ ளிவானவடிவே. (௨)

பாரெலாந்துதிபெற்ற பாதவீரன் மோதிரம்பாடகந் தண்டைகொலுசும், பதிந்தவிடை மீதினிலணிந்தபட்டா டையும் பசும்பொன்னி னொட்டியாணமும், வாரணியு மார்பினிற் சரப்பளிபதக்கமும் வச்சிரமணிதாலியழகு ம், வையகந்துதிபெற்ற கையினிற்கடகமும் வன்னநிற மானகிளியுஞ், சிரொழுகுகாதினிற் கம்மலுந் தொடு கொப்புஞ்செகமெலா நிறைந்தவுருவுஞ், சித்ரவொளி பா ர்வையுமிரத்னமூக்குத்தியுஞ் செண்பகமுடித்தகுழையு ம், தாரணியிலுன்பெருமை சாற்றவெளிதாகுமோ தர ணிபுகழொற்றியூர்வாழ் தங்கமலர்நாதர்சடை கங்கையு ருவானகொடி திங்களொளிவானவடிவே. (௩)

தாயதுவயிற்றிலே மாயமாய்த்தரித்துநான் றங்கினே னங்குசிலநாள், தரணியில்விழுந்தபின் புழுதியில்புரண் டுதவழ்ந்தடி நடந்து சிலநாள், காயமும்வளர்ந்திந்த பாரி னிலுழன்றுமிக் காளையாய்த்திரிந்துசிலநாள், காமனுல்

வதங்கியே யூமைபோல்மயங்கிக்கருத்தது வழிந்துசில
நாள்,மாய்கையாலேலோக வாழ்க்கைதனை மெய்யென்
றுமயங்குதென்மனதிலம்மா, மாறுதபிறவிதய ராரா
லெடுக்கதர மைந்தன்சுமக்கவசமோ, தாயென்றவுன்னை
நானம்பினேனருள்புரிகவ தரணிபுகழொற்றியூர்வாழ்
தங்கமலர்நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொ
ளிவானவடிவே, (௪)

நற்செயலிலாதவுட[illegible]சைபாடானசுகம் நற்குணமி
லாதகுறைகள் நான்முகனெனும்பாவி செய்திடுங்கபட
மோபெரியோர்கள்செய்ததவமோ சற்சனர்களில்லாத
சபையினைப்போலவே தயங்கிமிகவேயிளைத்தேன், தா
யே யுன்னுதாவு யேழையான்செய்தபிழை தாயலாலார்,
பொறுப்பார், அர்ச்சனைகள்செய்துதொழு மிச்சையடி
யாரினு மாதரத்தொடுபுரப்பா, யன்னையுனையல்லாதுபி
ன்னைவேறில்லையே யநாதரட்சகியல்லவோ,தற்சொருப
மாயிலகு மச்சுதன்றங்கையே தரணிபுகழொற்றியூர்வா
ழ்,தங்கமலர்நாதர்சடை கங்கையுருவானகொடி திங்க
ளொளிவானவடிவே, (௫)

நில்லாதசமுசாரமாய்கை யெனைவந்துதானித்தமும்
வாதிக்குதே,நெஞ்சமதுபஞ்சைபோலஞ்சியே சஞ்சலம்
நினைவினிற்பெரிதாகுதே,நல்லோரையெண்ணுமல் பெர

மொருவராற்சொல்லதரமோ பேயானிந்தயிடையிற்சிக்கியேபுலம்பியும் பூமிதனிலே, பெண்களெனும்மாய்கையாலங்கமதுவாடியேபிர்மையால் மெய்தளர்ந்தேன், தாயென்றுவலறியழவேனென்று கேட்கிலாய்தருமமோவுந்தனுக்குத்,தஞ்சமென்றுன்பாத நெஞ்சினினினைந்தோர்கள் தளர்வரோதரணிதனிலே தாயேயிதர்மமோமாணிடதங்கையே தரணிபுகழொற்றியூர்வாழ் தங்கமலர் நாதர்சடை கங்கையுருவானகொடி திங்களொளிவானவடிவே. (௮)

எத்தனைத்துயரொன்றியம்புவேனம்மம்ம வெளியேன் செய்கொடுமையேதோ,இக்காயமிச்செல்வநிலையென்று நம்பியே யிப்படியெலாந்தளர்ந்தேன், பெற்றதாய் நீயென்று முறையிட்டுவலறிடப் பேசாதிருப்பதேனோ, பேய்ச்சியென்றேசிடத் தாட்சியோ அம்மணிபிள்ளைமேற் கோபமேதோ,அத்திமுகனைப்பெற்ற நித்தியகல்யாணியே யமரர்தொழுசர்வாணியே,அறியாதசிறுவன் மேலினியாகிலுளமகிழ்ந்தன்புவைத்தருள்புரிகுவாய்,தத்துமயில்வாகனனை பெற்றகவுமாரியே தரணியுகழொற்றியூர்வாழ் தங்கமலர்நாதர்சடை கங்கையுருவானகொடிதிங்களொளிவானவடிவே. (௯)

படிக்கவறியேனுனைத் துதிக்கவறியேனென்ன பாதகத்தின் கொடுமையோ,பாட்டுமறியேன் கவிதைகேட்டு

## வடிவுடையம்மன் ஆசிரியவிருத்தம்.

மறியேன் மிக்கபாவலர்களைசமறியேன் நடுங்கிடக்கு
ருவடிவணங்கவறியேன் சடிலனாதனடி பூசையறியேன்,
நான்மனிதனுருவாகிபூமியிற்சனமித்த நலமானசெல்வ
மறியேன,கடல்சூழுமிவ்வுலகி லெனபோலுமுடனைக்
கண்டதுண்டோவருளுவாய், காமாட்சியுந்தனிட பாத
மேநம்பினேன கனமவினையணுகாமலே, தடுத்தடிமை
கொண்டெனைக் கடைத்தேறவேயருள் தாணிபுகழொற்
றியூர்வாழ்,தங்கமலர்நாதர்சடைக்கங்கையுருவானகொடி
திங்களொளிவானவடிவே. (௰)

மண்ணினிலிருக்களவ மின்றுமுதலாகவிம் மனுவொ
னறுகேட்பதடியேன,மாறுதசெல்வமு நீங்காதகல்வியு
மனுநீதிஞானவழியுங் - கண்ணிலிருளடாமல்காயமிகு
வாடாமல் கைகால்கேணைகாமலே, காலனுக்கஞ்சாமல்
கலியோனுமிஞ்சாமல் கடுஞ்சினம்வாராமலே, பண்ண
வேதருமமுமினியவுபகாரமும் பசித்தபேர்க் கமுதுத
ரவும்,பாருலகிலுந்தனிடபாதத்தைநம்பினேன பக்ஷமா
யிரக்ஷியம்மா. தண்ணிதழ்மாலையணிதற்பரற்கமுதமே
தரணிபுகழொற்றியூர்வாழ்,தங்கமலர்நாதர்சடை கங்கை
யுருவானகொடி திங்களொளிவானவடிவே. (௰௧)

வடிவுடையம்மன ஆசிரியவிருத்தம்.

முற்றிற்று.